# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 298/2024 நாள்.17.04.2026

PW1- திரு. செந்தில்கண்ணன், த/பெ. திரு. ராமலிங்கம்

2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு தாக்கல் செய்ய விபரம் சொன்னது யார் என்றால் நான்தான். எனக்கு வயது என்ன என்றால் 50. நான் படித்துள்ளேனா என்றால் படித்துள்ளேன். புல எண் 513/2 தற்போது 513/42 என்ற சொத்து தற்போது எங்குள்ளது என்றால் திருவையாறு தெற்குவீதியில் உள்ளது. இந்த சொத்து யார் பெயரிலுள்ளது என்றால் இளையசகோதரர் பெயரிலிருந்து மாற்றபட்டுள்ளது. யார் பெயருக்கு மாற்றபட்டுள்ளது என்றால் யூஜீன் ராஜன். அவர் கிரையம் வாங்கியுள்ளாரா என்றால் தெரியவில்லை. யூஜீன் ராஜனை இந்த வழக்கில் எதற்காக தரப்பினராக சேர்த்தேன் என்றால் குடும்பத்தாரால் வாங்கபட்ட சொத்தை அவர் வாங்கியுள்ளார் அதில் எனக்கும் பாகம் உள்ளது அதனால் சேர்த்துள்ளேன். யூஜீன்ராஜன் கிரையம் வாங்கிய ஆவணம் செல்லதக்கதல்ல என்று நான் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. சசிகண்ணன் 1ஆம் பிரதிவாதி யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் திருச்சியை சேர்ந்த ராஜசேகர். எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் 2007ஆம் ஆண்டு தேதி தெரியாது. அந்த கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்திருக்கிறேன். அதை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. அந்த கிரைய பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் நகல் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2006இல் 1ஆம் பிரதிவாதிக்கு என்ன வயது என்றால் 30க்கு மேல் இருக்கும். அவருக்கு அப்போது திருமணமாகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. அவருக்கு எந்த வருடம் திருமணம் என்றால் 2001 இறுதியில் திருமணம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் கிரைய பத்திர நகல் நான் நகல் வைத்ததன் பத்திரமா என்றால் ஆமாம். கிரையத்தொகை அதில் எவ்வளவு சொல்லபட்டுள்ளது என்றால் தெரியவில்லை. அந்த பத்திரத்தில் ரூ2,70,000/-கிரையம் பேசியதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் ஆவணத்தில் இருந்தால் மறுக்கஇயலாது. ராஜசேகர் 1ஆம் பிரதிவாதியிடமிருந்து அந்த கிரைய தொகை முழுவதும் பெற்றுகொண்டு கிரையம் எழுதிகொடுத்ததாக வாசகம் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு ஆமாம் என்று சொல்கிறார். என் அப்பா வங்கியில் வேலை பார்த்தார் என்றால் ஆமாம்.2ஆம் பிரதிவாதி இந்த வழக்கில் என்ன கட்சி செய்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.1ஆம் பிரதிவாதி திருவையாறில் TVS வாகன நிறுவன

டலராக இருந்தார் என்றால் ஆமாம். அவருக்கு தனிபட்ட வருமானம் உள்ளது என்றால் ஆமாம். 2ஆம் பிரதிவாதி எதிர்வழக்குரை பற்றி என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தில் நான் மறுத்து எதுவும் சொல்லவில்லை என்றால் ஆமாம். யூஜீன் கிரையம் வாங்கிய சொத்தில் நான் எந்த பாகஉரிமையும் கோரமுடியாது என்றால் எனது குடும்பத்தாரால் வாங்கபட்ட சொத்து என்பதால் நான் பாகம் கோருகிறேன். எனது குடும்பத்தாரால் வாங்கபட்டது என்பதை காண்பிக்க ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 2ஆம் பிரதிவாதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு சந்தைவிலைக்கு கிரையம் பெற்றுள்ளார் என்றும், அந்த சொத்தில் நான் ஏதும் பாகம் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. எந்த வருடம் 1ஆம் பிரதிவாதி 2ஆம் பிரதிவாதிக்கு விற்றார் என்றால் 2014இல் பேசிவைக்கபட்டு 2017 இல் கிரையம். 2014லேயே எனக்கு மேற்படி கிரையம் நடக்கபோற விஷயம் தெரியும் என்றால் தெரியாது. நான் எப்போது தெரிந்துகொண்டேன் என்றால் 2018 இல் ஆன்லைன் நகல் வாங்கும்போது தெரியும். நான் வில்லங்கம் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. 2017லிருந்து 2024 வரை 2ஆம் பிரதிவாதி விலைக்கு வாங்கிய சொத்தை பொறுத்து நான் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல எனது அப்பாவிடம் அவர் இறக்கும் வரை கேட்டுகொண்டிருந்தேன். 2017 முதல் 2ஆம் பிரதிவாதி அனுபவத்தில் அவர் விலைக்கு வாங்கிய சொத்து உள்ளது என்றால் ஆமாம். அந்த சொத்தில் எனக்கு கூட்டு அனுபவம் இல்லை என்றால் ஆமாம். யூஜீன் பெயரில் இதுநாள் வரை வருவாய்துறை ஆவணங்கள் உள்ளது என்றால் தெரியாது. இந்த சொத்தை பொறுத்தவரை எனக்கு பாகஉரிமை கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சரியான பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2இனசொத்தை பொறுத்தவரை 1ஆம் பிரதிவாதிக்கு பாகம் ஒதுக்கிஅதிலிருந்து 2ஆம் பிரதிவாதி ஒதுக்கலாமா என்றால் ஒதுக்கலாம். நான் தாக்கல் செய்த பிராது குறைபாடுடையது என்றும் அதனால் அது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>5ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

என் தகப்பனார் ராமலிங்கம் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் 28.3.1997இல் ஜீவன் சுரக்ஷா பென்சன் திட்ட பாலிசி எடுத்திருந்தார் என்றால் ஆமாம். அந்த பாலிசி மூலம்

அவர் இறக்கும் வரை பென்சன் வாங்கினார் என்றால் ஆமாம். அந்த பாலிசியில் என் அம்மாவை நாமினியாக அப்பா சேர்த்திருந்தார் என்றால் ஆமாம். அவர் என் அப்பா இறப்பதற்கு முன்பாகவே தவறிவிட்டார் என்றால் ஆமாம். அந்த பாலிசி தற்போது திறந்தநிலையில் உள்ளது என்றும் அதிலிருந்து எனக்கும் என்னுடைய சகோதரருக்கும் கிடைக்கும் என்றால் ஆமாம்.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.17 17:10:04 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**